2018-2019 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக்குழுக்கூட்டம்

தமிழ்த்துறை

2018-2019 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக் குழுக் கூட்டம் 09.02.2019 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்குத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அறையில் நடைபெற்றது. துறைத்தலைவர் (பொறுப்பு) முனைவர் ஆ. இருதயராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் பேரா. முனைவர் சு. ரவிஜேசுராஜ் அவர்களின் இறைவேண்டலுடன் தொடங்கியது. துறைக் கூட்டத்தில் புறவிற்பன்னர்கள் நால்வரும், துறைப் பேராசிரியர்கள் 18 பேரும், மாணவப் பிரதிநிதிகள் இருவரும் கலந்து கொண்டனர்.

கலந்துகொண்டோர்

1. பேரா. முனைவர் ம. அன்பரசு சே.ச.
2. பேரா. முனைவர் பெஸ்கி
3. பேரா. முனைவர் ந. வேலம்மாள்
4. பேரா. முனைவர் சோபனா
5. முனைவர் ஆ. இருதயராஜ்
6. முனைவர் அ.கு. இக்னேஷியஸ் சேவியர்
7. முனைவர் சூ.ஜா. இதயராஜா
8. முனைவர் க. ரே. கலாவதி
9. முனைவர் ச. கந்தன்
10. முனைவர் சு. ரவிஜேசுராஜ்
11. முனைவர் கி. கில்பர்ட் ஜெனார்த்தனன்
12. முனைவர் மி. கவிதா
13. முனைவர் இரா. அந்தோணிராஜ்
14. முனைவர் ஆ. முருகன்
15. முனைவர் ஆ. ஜாண்பால்
16. பேரா. ம. முருகன்
17. முனைவர் மா. பாலசெல்வி
18. முனைவர் ச. இளங்கோமணி
19. பேரா. ஆல்பர்ட்
20. முனைவர் த. ஷைலா ஜோஸ்டர்

21. மாணவர் அந்தோணி சகாய சோபியா ABSENT

22. பேரா. வெ. ஆனந்தன் (முதுகலை மாணவர்)

23. மாணவி அனுசியா ( )

24. மாணவர் ராமன்சன் (இளங்கலை தமிழ்த்துறை)

## பாடத்திட்டக் குழுக் கூட்டம்

விவாதக் கருத்துக்கள் பின்வருமாறு:

பட்டப்படிப்பு பொதுத்தமிழ்:

மேல்நிலைக் கல்விப் பாடத்திட்ட முறையைப் பரிசீலனை செய்து, அதன் தரத்தை விட மேம்பட்டதாக வரும் காலங்களில் பொதுத்தமிழ் பாடத்திட்டத்தைச் சிறப்பாக அமைக்கப் பாடத்திட்டக் குழு பரிந்துரைத்தது.

B.A. TAMIL:

சிற்றிலக்கியம் தாளில் கூறு 4 இல் இடம்பெறும் குற்றாலக் குறவஞ்சிப் பகுதியில் இடம்பெறும் பாடல் எண்களை நீக்கிவிட்டு, நாட்டுவளம், நகர்வளம், குறத்தி குறி சொல்லும் முறை என்பன போன்ற தலைப்புகளைச் சேர்க்கலாம் எனவும், இத்தாளுக்கான பாடநூல்களில் புலியூர்க்கேசிகன் உரையை நீக்கிவிட்டு, வேறு உரைநூல்களைச் சேர்க்கலாம் எனவும் பாடத்திட்டக் குழுக் கூட்டம் பரிந்துரை செய்தது.

M.A. TAMIL:

'இலக்கிய வரலாறு' எனும் தாளுக்கான பாடநூல்களை மாற்றம் செய்யப் பாடத்திட்டக் குழு பரிந்துரைத்தது.

கூறு 1, 2, 3 ஆகிய பகுதிகளுக்கு மு. வரதராசனாரின் இலக்கிய வரலாறு என்ற நூலையும் கூறு 4, 5 ஆகிய பகுதிகளுக்குப் பாக்கியமேரியின் இலக்கிய வரலாறு என்ற நூலையும் பாடநூல்களாகச்

சேர்க்கலாம் என்று பாடத்திட்டக்குழு பரிந்துரை செய்தது.

'மொழி இலக்கணம் இலக்கியம் திறனாய்வுகளின் வரலாறு' எனும் நூலில் அலகு 2, 4 மாற்றியமைப்பது பற்றிப் பரிந்துரைக்கப்பட்டது.

அலகு 2 - இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு; வரி வடிவக் கொள்கை, ஒலி வடிவக் கொள்கை, சொற்புணர்ச்சிக் கொள்கை, புணர்ச்சி மாற்றங்கள், சொல்; வரையறை, விளக்கங்கள், சொல் வகைகள் என்றவாறும் அலகு 4 இல் இலக்கியத் திறனாய்வு - வரையறை - மதிப்புரை, ஆய்வுரை, திறனாய்வுரை - சொற்பொருள் தொடர்பு என்றமையவும் பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

இந்நூலுக்கான பாடநூல் வரிசையில் 2வது நூல் தொல்காப்பியம் - எழுத்து, சொல் இலக்கணம் என்று மாற்றப்படுகிறது.

'சிற்றிலக்கியம்' நூலுக்கான பார்வை நூலாக இரா. கண்ணனின் சிற்றிலக்கிய ஆராய்ச்சி தொகுதி 1, 2 என்ற நூலை மாற்றலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

'செம்மொழித் தமிழ்' எனும் நூலில் கூறு - 3 இல் தமிழ்ச் செம்மொழி வரலாறு - பயன் - பங்களிப்பு - அறிக்கைகள் என்றவாறு தலைப்புகள் மாற்றப்படுகிறது.

'இலக்கியத் திறனாய்வும் வரலாறும்' என்ற நூலுக்கான பாடநூல்களில் கூடுதலாக ந. பிச்சமுத்துவின் இலக்கியத் திறனாய்வும் இலக்கியக் கொள்கைகளும் என்ற நூலைச் சேர்க்கலாம் எனவும் பார்வை நூல்களில் துரை சீனிச்சாமியின் திணைக் கோட்பாடு நூலைச் சேர்க்கலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

M.PHIL TAMIL

'ஆய்வு நெறிமுறைகள்' எனும் நூலில் அலகு 3 மற்றும் அலகு 4 என்ற இரு அலகுகளும் ஒரலாக இணைக்கப்படலாம் எனவும்.

நூலகமும் ஆய்வும்; நூலகமும் தரவு திரட்டுதலும்; திணைநூற்பட்டியும் பின்னிணைப்புகளும்; அடிக்குறிப்பும்

மேற்கோளிடலாம் என்று அலகு 4-ஐ மாற்றி அமைக்கலாம் எனவும்

அலகு 1, 4, 5 க்குப் பாடநூலாகத் தமிழண்ணல் நூலும், அலகு 2-க்குப் பாடநூலாக சு. வேங்கடராமன், இரா. மோகன் நூலும் அலகு 3-க்குச் சிதம்பரநாதன் நூலும் பாடநூலாக அமையலாம் எனவும் பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

'இலக்கியத் திறனாய்வு அணுகுமுறைகள்' எனும் நூலில் அலகு 1 - அலகு 5 ஆகவும், அலகு ஐந்தானது அலகு-1 ஆகவும் மாற்றப்படுகிறது.

அலகு மூன்றிற்கான கைலாசபதியின் பாடநூலை நீக்கிவிட்டு துரை சீனிச்சாமியின் சமூகவியல் அணுகுமுறை நூலையும் ஆ. வேலுப்பிள்ளையின் காலமும் கருத்தும் என்ற நூலையும் பாடநூல்களாக இணைக்கலாம் என்று பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

பின்னூட்டக் கருத்துக்கள்:

பாடத்திட்டத்திலுள்ள பாடநூல்கள் அனைத்தும் நூலகத்தில் மாணவர்களுக்குக் கிடைக்க வசதி செய்து தருமாறு மாணவப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்.

முதுகலைப் பாடத்திட்டத்தில் இலக்கணத் தாளில் மொழியியல் சார்ந்த பகுதிகளையும் நடத்தினால் நன்றாக இருக்கும் என்று முதுகலை மாணவப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்

பாடத்திட்ட மாற்றம் குறித்த விவாதம் வரும்பொழுது நிகழும் பாடத்திட்டக்குழுக் கூட்டத்தில் இக்கருத்து விவாதிக்கப்படும் என்று பாடத்திட்டக்குழு பதிலளித்தது.

இளங்கலைப் பாடத்திட்டத்தில் இடம்பெறும் சுற்றுச்சூழலியல் தாளானது தமிழ் பயிலும் மாணவர்களுக்கு நேரடியாகத் தொடர்பு இல்லை என்று இளநிலை மாணவப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைப்படி வேலைவாய்ப்பு தரும் தாளானது இணைக்கப்பட வேண்டும்

என்ற அடிப்படையிலும் இன்றைய போட்டித் தேர்வுக்கான முதன்மைப் பாடங்களில் ஒன்று என்ற அடிப்படையிலும் CBCS - CREDIT SYSTEM அடிப்படையிலும் இந்நூலானது சேர்க்கப்பட்டுள்ளது என்று பாடத்திட்டக்குழு விளக்கம் அளித்தது.

மேலும் இந்நூலை வகுப்பறைச் சூழலோடு நிறுத்தி விடாமல் களஆய்வு முறையிலும் கற்றல் கற்பித்தல் முறையாக அமைத்தால் மாணவர்களிடம் ஈடுபாடும் பயன்பாடும் அதிகரிக்கும் என்று பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

## Internship programme / Project work :

* இளங்கலை மாணவர்கள் பாடத்திட்டத்தோடு தொடர்புடைய பிற துறைகளோடு தொடர்பு கொண்டு பயிற்சி பெற்றுச் சான்றிதழ் பெற வேண்டும் எனப் பாடத்திட்டக் குழுவினர் பரிந்துரைத்தனர்.

சான்றாக இதழியல் அலுவலகங்கள், அருங்காட்சியகம், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களுக்குச் சென்று பயிற்சி பெறுதல், பங்கெடுத்தல் பாடத்திட்டத் தொடர்புடைய தரவுகளைத் திரட்டுதல்.

* முதுகலை மாணவர்கள் பாடத்திட்டத்தோடு தொடர்புடைய ஓலைச்சுவடி, கல்வெட்டுகள், தொல்லியல் சார்ந்த பயிற்சியினை அருங்காட்சியகம் மூலம் பெற்று சான்றிதழ்கள் பெறலாம் என்ற கருத்தினைப் பாடத்திட்டக்குழு முன்வைத்தது.

## ECC :

படைப்பிலக்கியமும் மொழிபெயர்ப்பும் என்ற தாளுக்கான முதல் இரண்டு பாடநூல்கள் நீக்கப்பட்டு மு. சுதந்திரமுத்துவின் படைப்புகளை நூலைச் சேர்க்க பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

கவின் கலைகள் எனும் தாளில் பார்வைநூல் எனும் தலைப்பு பாடநூல் என்று மாற்றப்படுகிறது.

Certificate course:

தமிழ் கற்பிக்கும் முறை எனும் தாள் தமிழ் கற்பிக்கும் முறைகள் என்று மாற்றப்படுகிறது.

பாடத்திட்டப் பின்னூட்டக் கருத்துக்கள்:
(Syllabus Feed back)

பாடத்திட்டக் குழுவில் கலந்துகொண்ட மாணவர்களின் பின்னூட்டக் (Feed back) கருத்துக்களும் விவாதிக்கப்பட்டன.

பல பகுதிகளாக வினாக்கள் பிரிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட வினாநிரலில் மாணவர்கள் (பல்துறை) வழங்கிய பின்னூட்டத்தின் அடிப்படையில் பொதுத்தமிழ், இளங்கலைத் தமிழ், முதுகலைத் தமிழ், ஆய்வியல் நிறைஞர் ஆகிய பாடப்பகுதிகளுக்கான பாடத்திட்டத்தின் தரம் 85 விழுக்காட்டிற்கு மேல் சராசரியாக பெற்றுள்ளமையைப் பாடத்திட்டக்குழு மனதாரப் பாராட்டியது. மேலும் வருங்காலத்தில் பாடத்திட்டத்தைக் காலச்சூழலுக்கேற்பப் பொருந்தும் வகையிலும், மாணவர் பயன்பெறும் வகையிலும் பாடத்திட்டத்தைச் செழுமைப்படுத்தவும் பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட புறவிற்பன்னர்கள், தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், மாணவப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பேரா. முனைவர் அ.கு. இக்னேஷியஸ் சேவியர் நன்றி கூறினார். இத்துடன் பாடத்திட்டக்குழுக் கூட்டம் நிறைவடைந்தது.

2019 - 2020 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக்குழுக் கூட்டம்.

தமிழ்த்துறை

2019 - 2020 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக் குழுக் கூட்டம் 08.02.2020 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்குத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அறையில் நடைபெற்றது. துறைத்தலைவர் முனைவர் இரா. பிரான்சிஸ் சேவியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் பேரா. முனைவர். சு. ரவிஜேசுராஜ் அவர்களின் இறைவேண்டலுடன் தொடங்கியது. கூட்டத்தில் புறவல்லுநர் மூன்று பேரும், துறைப்பேராசிரியர்கள் 19 பேரும், மாணவப் பிரதிநிதிகள் இருவரும் கலந்து கொண்டனர்.

## கலந்து கொண்டோர்

1. பேரா. முனைவர் பெஸ்கி [signature]
2. பேரா. முனைவர் நா. வேலம்மாள் [signature]
3. பேரா. முனைவர் ம. அன்பரசு சே.ச. [signature]
4. பேரா. முனைவர் இரா. பிரான்சிஸ் சேவியர் [signature]
5. முனைவர் ஆ. இருதயராஜ் [signature]
6. முனைவர் அ. கு. இக்னேஷியஸ் சேவியர் [signature]
7. முனைவர் கு. ஜா. இதயராஜா [signature]
8. முனைவர் த. சே. கலாவதி D. X. Calavathi
9. முனைவர் ச. கந்தன்
10. முனைவர் சு. ரவிஜேசுராஜ் [signature]
11. முனைவர் வி. கில்பர்ட் ஜெனார்த்தனன் [signature]
12. முனைவர் மி. கவிதா [signature]
13. முனைவர் இரா. அந்தோணிராஜ் [signature]
14. முனைவர் ஆ. முருகன் [signature]
15. முனைவர் ஆ. ஜாண்பால் [signature]
16. பேரா. ம. முருகன் [signature]
17. முனைவர் மா. பாலசெல்வி [signature]
18. முனைவர் ச. இளங்கோமணி [signature]
19. பேரா ஜா. ஆல்பர்ட் [signature]
20. முனைவர் க. ஷிலா ஜோஸ்டர். [signature]

21. முனைவர் அந்தோணி சகாய சோபியா. ஜே. சோபி.ஜே.

22. முனைவர் கு. டெய்சி கு.டெய்சி

23. மாணவி கு. பேச்சியம்மாள் (முதுகலை மாணவர்) [illegible]

24. மாணவி மி. சகாய ஷாலினி (இளங்கலை மாணவர்) [illegible]

## பாடத்திட்டக்குழுக் கூட்டம்

விவாதக் கருத்துக்கள் பின்வருமாறு:

பட்டப்படிப்பு – பொதுத்தமிழ்

பொதுத்தமிழ் பாடத்திட்டத்தில் செய்யப்பட்ட திருத்தம் பற்றிக் கூறப்பட்டது. ~~அதனால்~~ குற்றாலக் குறவஞ்சி-யில் மலைவளம் பாடமாகச் சேர்க்கப்பட்டு, ஏற்கனவே இடம் பெற்றிருந்த சிங்கன், சிங்கி வருணனை நீக்கப்பட்டதன் காரணமும் தெரிவிக்கப்பட்டது.

பொதுத்தமிழ் பாடத்திட்டத்தை அனைத்து அறிவியல், கலை பாடத்திட்டம் பயிலும் மாணவர்களுக்கு நான்கு பருவத்திற்கும் ~~[illegible]~~ பயன்படுகின்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

B.A. TAMIL:

சிற்றிலக்கியம் தாளில் 4 வது அலகில் இடம்பெறும் திருக்குற்றாலக் குறவஞ்சி பாடத்தில் பக்க எண்கள் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. இது பதிப்பகங்-களுக்கேற்ப வெளிவரும் பாடப்புத்தகத்தில் இப்பக்க எண்களின் வரையறை குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இதனால் குறிப்பிட்ட தலைப்புகளில் பாடங்களை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டது. இக்கோரிக்கையைப் பாடத்திட்டக் குழு ஏற்றுக் கொண்டது.

M.A. Tamil:

இரண்டாம் ஆண்டு நான்காம் பருவத்திற்குரிய இலக்கணம் -யாப்பு, அணி) என்ற தாளில் அச்சிடும் போது சில பகுதிகள் தவறுதலாக விடுபட்டு

மன்னர் சேர்க்கப்பட்டது பற்றி கூறப்பட்டது.
அலகு 1 - யாப்பருங்கலக்காரிகை - உறுப்பியல், அசை, சீர், தளை, அடி, தொடை
அலகு 5 - புதிய யாப்பு வடிவங்கள் - கண்ணி, கும்மி சிந்து கீர்த்தனை என்று அச்சிடும் போது விடுபட்ட பகுதிகள் மன்னர் சேர்க்கப்பட்டது பற்றியும் பாடத்திட்டக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

M. PHIL TAMIL

'தமிழ்ச் சிந்தனை மரபு' எனும் தாளில் அலகு 1 இல் சில தலைப்புகளைச் சேர்க்கலாம் என்றும் அலகு 2 இல் இடம்பெறும் தலைப்புகளை மாற்றலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

பாட நூல்கள் வரிசையில் முதல் பாடநூலாக தொல்காப்பியம் - பொருளதிகாரம் (அலகு-1) என்பது இணைக்கப்படலாம் என்று பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

'இலக்கியத் திறனாய்வு அணுகுமுறைகள்' எனும் தாளில் அலகு 5 அலகு-1 ஆகவும் அலகு-1 அலகு-5 ஆகவும் மாற்றப்படுகிறது.

மன்னூட்டக் கருத்துக்கள்:

முதுகலைப் பாடத்திட்டத்தில் இலக்கணத் தாளில் செய்யுள் உறுப்புக்கள் அனைத்தையும் நடத்தினால் நன்றாக இருக்கும் என்று முதுகலைமாணவப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்.

இளங்கலைத் தமிழ் பாடத்திட்டத்தில் அலகு 5இல் இடம்பெறும் தலைப்புகளுக்கு சரியான பாடநூல் கள்ளை என்று இளங்கலைமாணவப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்

பாடத்திட்ட மாற்றம் குறித்த விவாதம் வரும் பொழுது நிகழும் பாடத்திட்டக்குழு கூட்டத்தில் இக்கருத்து விவாதிக்கப்படும் என்று பாடத்திட்டக்குழு

பதிலளித்தது.

பாடத்திட்டப் பின்னூட்டக் கருத்துக்கள்:
(Syllabus Feed back)

பாடத்திட்டக்குழுவில் கலந்துக் கொண்ட புறஉறுப்பினர்கள் இளங்கலை, முதுகலை, ஆய்வியல் நிறைஞர், பொதுத்தமிழ் ஆகிய பாடப்பகுதிகளுக்கான பாடத்திட்டத்தின் தரம் சிறப்பாக அமைந்திருந்ததைப் பற்றி மனதார பாராட்டினர். வரும் காலங்களில் ஆட்சித்தமிழ், தொல்லியல், கல்வெட்டியல் போன்ற பாடங்களைச் சேர்த்தால் நன்றாக இருக்கும் என்று பாடத்திட்டக் குழு பரிந்துரைத்தது.

கூட்டத்தில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் முனைவர் ஆ. இருதயராஜ் நன்றி கூறினார். இத்துடன் பாடத்திட்டக்குழுக் கூட்டம் நிறைவடைந்தது.

## 2020 - 2021 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக்குழுக் கூட்டம்

தமிழ்த்துறை

2020 - 2021 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக்குழுக் கூட்டம் 06.02.2021 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்குத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அறையில் நடைபெற்றது. துறைத்தலைவர் முனைவர் இரா. பிரான்சிஸ் சேவியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் முனைவர் சு. ரவிசேகரராஜ் அவர்களின் இறைவேண்டலுடன் தொடங்கியது. கூட்டத்தில் புறவல்லுநர் இருவரும் துறைப்பேராசிரியர்கள் 20 பேரும் மாணவ பிரதிநிதிகள் இருவரும் கலந்து கொண்டனர்.

### கலந்து கொண்டோர்

1. முனைவர் அ. வளர்மதி
2. முனைவர் கோ. இராஜேஸ்வரி — கோ. இராஜேஸ்வரி
3.
4. முனைவர் இரா. பிரான்சிஸ் சேவியர்
5. முனைவர் ஆ. இருதயராஜ்
6. முனைவர் அ. கு. இக்னேஷியஸ் சேவியர்
7. முனைவர் கு. ஜா. இதயராஜா
8. முனைவர் த. சே. கலாவதி
9. முனைவர் ச. கந்தன்
10. முனைவர் சு. ரவிசேகரராஜ்
11. முனைவர் வி. கில்பர்ட் ஜெனார்த்தனன்
12. முனைவர் மி. கவிதா — மி. கவிதா
13. முனைவர் இரா. அந்தோணிராஜ்
14. முனைவர் ஆ. முருகன்
15. முனைவர் ஆ. ஜான்பால் — அ. ஜான்பால்
16. முனைவர் ம. முருகன்
17. முனைவர் மா. பாலசெல்வி — மா. பாலசெல்வி
18. முனைவர் ச. இளங்கோமணி
19. பேரா. ஜா. ஆல்பர்ட்
20. முனைவர் த. ஷிபோ ஜோஸ்பர்
21. முனைவர் அந்தோணி சகாய சோபியா ஜே.

22. முனைவர் கு. டெய்சி
23. முனைவர் ச. தமிழினியன்
24. மாணவி இ. அன்டோ மோனிகா
25. மாணவி மு. திருமலை மித்ரா

## பாடத்திட்டக்குழுக் கூட்டம்

விவாதக் கருத்துக்கள் பின்வருமாறு:

அடுத்த கல்வியாண்டில் பாடத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

முதுகலைத் தமிழ்:

தொல்காப்பியம் இலக்கணம் - எழுத்து எனும் தாளின் அலகு 5 இல் மொழியியல் புதிதாக இணைக்கப்படுகின்றது.

இக்கால இலக்கியம் - கவிதையும் நாடகமும் எனும் தாளில் அலகு 3 இல் இடம்பெறும் [illegible] நீக்கப்படுகிறது. கூறு 4 இல் தண்ணீர் தண்ணீர் நாடகமும் கூறு 5 இல் புனித சவேரியார் கல்லூரியின் பயின்ற பழைய மாணவரால் எழுதப்பட்ட அட்சயா என்னும் நாவலும் புதிதாகச் சேர்க்கப்படுகிறது.

இக்கால இலக்கியம் புதினமும் சிறுகதையும் எனும் தாளில் புதிதாக சில நேரங்களில் சில மனிதர்கள், சாயாவனம் போன்ற நாவல்கள் இணைக்கப்படுகின்றன. மேலும் 4 சிறுகதைகள் புதிதாகவும், சேர்க்கப்படுகின்றன. ஏற்கனவே இருந்த 8 சிறுகதைகளும் மாற்றப்பட்டு மொத்தம் 12 சிறுகதைகள் பாடப்பகுதியில் இணைக்கப்படுகின்றன.

'காலந்தோறும் தமிழர் பண்பாடு' எனும் தாளில் அலகு 3, 4, 5 மாற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. அலகு 4 ஏற்கனவே உள்ளபடி அமைக்கலாம் என்று பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது. அலகு வாரியாகப் பாட நூல்களை அமைக்கவும் பாடத்திட்டக்குழு பரிந்துரை செய்தது.

'தமிழ் மொழி வரலாறு' எனும் நூலானது 'செம்மொழித் தமிழும் தமிழ்மொழி வரலாறும்' என்று பெயர் மாற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இப்பாடப் பகுதியில் அலகு 1 செம்மொழித் தொடர்பாக அமைக்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டது.

தொல்காப்பியம் 'இலக்கணம் சொல்' எனும் நூலில் அலகு 5 இல் மொழியியல் சார்ந்த பகுதிகள் இணைக்கப்படுகின்றன.

'பக்தி இலக்கியம்' நூலில் அலகு 4 இல் சிவவாக்கியாரின் சமூகம் சார்ந்த பாடல்கள் புதிதாக இணைக்கப்படுகின்றன.

'கிறித்தவமும் தமிழும்' நூலில் அலகு 1 இல் 'யோனா' சேர்க்கப்படுகிறது. அலகு 4 இல் இடம்பெறும் ஏசுநாதர் பிள்ளைத்தமிழ் நீக்கப்படுகிறது.

'அற இலக்கியம்' அலகு 4 இல் நாலடியாரின் சினமின்மை பாடல்கள் இணைக்கப்படுகிறது. ஆசாரக்கோவை நீக்கப்பட்டு நான்மணிக்கடிகை புதிதாகச் சேர்க்கப்படுகிறது.

'தமிழ் இலக்கிய வரலாறு' நூலுக்கான பாடநூல் மாற்றப்படுகிறது. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு எனும் புத்தகத்தின் அடிப்படையில் பாட அலகுகள் அமைக்கப்படுகின்றன.

'மொழி இலக்கணம், இலக்கியம் திறனாய்வு எனும் நூலின் அலகு 2 மாற்றியமைக்கப்படுகிறது.

'காப்பிய இலக்கியம்' நூலில் அலகு 5 இல் இடம்பெறும் முடியரசனின் 'பூங்கொடி' காப்பியம் நீக்கப்படுகிறது.

தமிழ் இலக்கண வரலாறு நூலில் அலகு 1 மாற்றப்படுகிறது.

'இலக்கணம் பொருள் யாப்பு அணி' எனும் நூலில் தொல்காப்பியம் புத்தகத்தில் இடம்பெறும் இயலின் அடிப்படையில் பாட அலகுகள் மாற்றப்படுகின்றன

சங்க இலக்கியம் எனும் நூலில் அலகு 1 எட்டுத்தொகை நூல்கள் இடம்பெறும் வகையில் மாற்றப்படுகிறது. அலகு 4 இல் நெடுநல்வாடை புதிதாகச் சேர்க்கப்படுகிறது. இப்பாடத்திற்குக் கழக வெளியீடுகள்

சார்ந்த நூலை முதன்மைப் பாடநூலாக அமைக்கப் பரிந்துரைக்கப்பட்டது.

ஆய்வியல் நெறிமுறைகள் எனும் தாளானது நான்காம் பருவத்தில் புதிதாகச் சேர்க்கப்படுகிறது.

'இலக்கியத் திறனாய்வும் வரலாறும்' என்ற தாளானது இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள் என்று மாற்றப்படுகிறது.

இளங்கலைத் தமிழ்:

இக்கால இலக்கியம் நாவல் சிறுகதை உரைநடை எனும் தாளானது இரண்டாம் பருவத்திலிருந்து மூன்றாவது பருவத்திற்கும், மூன்றாம் பருவத்திற்குரிய இக்கால இலக்கியம் கவிதை நாடகம் தாளானது முதல் பருவத்திற்கு மாற்றப்படுகிறது.

அறிவியல் தமிழ் எனும் தாளில் அலகு 4 மற்றும் 5 மாற்றியமைக்கப்படுகிறது.

பொதுத்தமிழ் பாடத்திட்டம்:

பொதுத்தமிழ் பாடத்திட்டத்தில் இடம்பெறும் செய்யுள் பகுதியானது இக்கால இலக்கியம், இடைக்கால இலக்கியம், காப்பிய இலக்கியம், சங்க இலக்கியம் என்று மாற்றியமைக்கப்படுகிறது.

நான்கு பருவத்திற்குரிய உரைநடைக் கட்டுரைகள், சிறுகதைகள், நாவல், பயண இலக்கியம், நாடக இலக்கியம் என அனைத்தும் மாற்றப்படுகிறது.

முதல் பருவத்தில் இலக்கிய வரலாறு பாடப்பகுதியில் இதழியல், வானொலி, தொலைக்காட்சி, இணையத்தமிழ் என புதிதாகத் தலைப்புகளைச் சேர்க்க பாடத்திட்டக்குழு அனுமதி அளித்தது.

இரண்டாம் பருவத்தில் அலகு 5 இல் இடம்பெறும் ஆட்சித்தமிழ் அகராதி நீக்கப்பட்டு கணினித் தமிழ்ச் சொற்கள் சேர்க்கலாம் என்று பாடத்திட்டக் குழு பரிந்துரைத்தது.

அடிப்படைத் தமிழ் :

முதல் பருவத்திற்கான அலகு 1 மாற்றியமைக்கப்பட்டது.

இரண்டாம் பருவத்தில் அலகு 3 இல் இடம்பெறும் அழகின் சிரிப்பு நீக்கப்பட்டு புரட்சிக் கவி காப்பியத்தில் இடம்பெறும் 'நீலவான ஆடைக்குள்' என்ற பாடலானது இணைக்கப்பட்டுள்ளது. அலகு 5 இல் ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்கள் (25 சொற்கள்) சேர்க்கப்படுகின்றன.

சிறப்புத் தமிழ் :

முதல் பருவத்தில் கண்ணீர்ப் பூக்கள். கவிதைத் தொகுப்பிலிருந்து சில கவிதைகள் சேர்க்கப்படுகிறது.

SBE, NME தாள்களில் மாற்றம் இல்லை.

அந்த கல்வி ஆண்டின் பாடத்திட்டத்தில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கேற்ப பாடத்திட்டம் அறிமுகப்படுத்தியது.

மாணவர் கருத்துக்கள் :

முதுகலைப் பாடத்திட்டத்தில் இலக்கணத் தாளில் செய்யுள் உறுப்புகள் அமைந்துள்ள பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டால் [illegible] என்று முதுகலை மாணவர் மகிழ்ந்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

வரும் கல்வியாண்டின் பாடத்திட்டத்தில் இம்மாற்றம் செய்யப்படுவதாக பாடத்திட்டக் குழு பதிலளித்தது.

இளங்கலைப் பாடத்திட்டத்தில் இளநிலைத் தமிழ் பாடத்திட்டத்தில் Tally, PhotoShop போன்ற புதிய பாடங்களை சேர்க்கப்பட்டால் நன்றாக இருக்கும் என்று இளநிலை மாணவர் மகிழ்ந்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

கூட்டத்தில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் முனைவர் ம. முருகன் நன்றி கூறினார். இத்துடன் பாடத்திட்டக்குழுக் கூட்டம் நிறைவடைந்தது.

# 2021 - 2022 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக்குழுக் கூட்டம்.

## தமிழ்த்துறை

2021 - 2022 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக்குழுக் கூட்டம் 23.04.22 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்குத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அறையில் நடைபெற்றது. துறைத்தலைவர் முனைவர் அ.கு. இக்னேஷியஸ் சேவியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் முனைவர் மைக்கேல் சைனி அவர்களின் இறைவேண்டலுடன் தொடங்கியது. இக்கூட்டத்தில் புறவிற்பன்னர் மூவரும் துறைப்பேராசிரியர்கள் பெரும் மாணவப் பிரதிநிதிகள் இருவரும் கலந்து கொண்டனர்.

### கலந்து கொண்டோர்

1. முனைவர் அ. வளர்மதி.
2. முனைவர் ந. இரதேவன் 23/04/2022
3. முனைவர் ஞா. குருசாமி
4. முனைவர் அ.கு. இக்னேஷியஸ் சேவியர்
5. முனைவர் இரா. பிரான்சிஸ் சேவியர்
6. முனைவர் ஆ. இருதயராஜ் AB
7. முனைவர் சூ. ஜா. இதயராஜா
8. முனைவர் த. சே. கலாவதி
9. முனைவர் ச. கந்தன் O.D
10. முனைவர் சு. ரவிசேகரராஜ்
11. முனைவர் வி. கில்பர்ட் ஜெனார்த்தனன்
12. முனைவர் பி. கவிதா
13. முனைவர் இரா. அந்தோணிராஜ்
14. முனைவர் ஆ. முருகன்
15. முனைவர் மைக்கேல் சைனி.
16. முனைவர் ஆ. ஜாண்பால்
17. முனைவர் ம. முருகன்
18. முனைவர் மா. பாலசெல்வி. மா. பாலசெல்வி.
19. முனைவர் ச. இளங்கோமணி.
20. பேரா. ஜா. ஆல்பர்ட்
21. முனைவர் த. ஷமீலா ஜோஸ்டர்
22. முனைவர் அந்தோணி சகாய சௌமியா ஜெ.

23. முனைவர் கு. டெய்சி
24. முனைவர் ச. தமிழினியன்
25. முனைவர் கி. ஜெனிபா மேரி.
26. மாணவர் சுப்புராஜ் (முதுகலை மாணவர்)
27. மாணவர் கி. ஜெனி அண்டனி (இளங்கலை மாணவர்)

## பாடத்திட்டக்குழுக் கூட்டம்

விவாதக் கருத்துக்கள் பின்வருமாறு:

பொதுத்தமிழ்:

பொதுத்தமிழ் முதலாம் பருவத்தில் சோதனை முறையில் சிறுகதைகள் இடம்பெறலாம் என்றும், தலித்தியம், பெண்ணியம் போன்ற தத்துவத்தின் அடிப்படையில் பாடப்பகுதிகளை அமைக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

பொதுத்தமிழ் இரண்டாம் பருவத்தில் உரைநடையில் 'சேக்கிழார் செஞ்சொல்திறம்' என்ற கட்டுரைக்குப் பதிலாகத் 'திருத்தொண்டர் புராணப் பக்தி நெறிகள்' என்ற கட்டுரை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதனை பாடத்திட்டப் புத்தகத்திலும் (Syllabus) மாற்ற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆட்சிச் சொல்லகராதியில் இடம்பெறும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை அச்சிட்டு மாணவர்களுக்குத் தருதல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறப்புத்தமிழ்:

வினாத்தாள் அமைப்பு முறையில் மாற்றம் செய்ய வேண்டும். கூறு 3 இல் இடம்பெறும் வாய்மை அதிகாரத்தில் 10 குறள்களையும் இணைக்க வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

அடிப்படைத்தமிழ்:

பாடத்திட்ட புத்தகத்தில் (Syllabus) ஆத்திச்சூடி – 10 பாடல்கள் என்று குறிப்பிடுதல் வேண்டும் என்று சொல்லப்பட்டது.

முதுகலைத்தமிழ்

'இலக்கணம் - எழுத்து' எனும் தாளின் பார்வை நூலில் இடம்பெறும் 'முனைவர் கு. பரமசிவம். இக்கால மொழியியல்' எனும் புத்தகத்தைப் பாட நூலாக மாற்ற வேண்டும்.

இலக்கண விதிகளை விளக்குவதற்கு சில இணைய இணைப்புகளைப் (link) பயன்படுத்தலாம் என்ற கருத்தைப் புறவிற்பன்னர் எடுத்துரைத்தார். இக்கருத்தினை அடுத்த பாடத்திட்டக் குழுவில் பேசலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

இக்கால இலக்கியம் - கவிதையும் நாடகமும் எனும் தாளில் அலகு 2 இல் இடம்பெறும் கவிதைகளைச் சிறிது குறைக்கலாம். சிற்பி கவிதைகளை 15 லிருந்து 10 ஆகக் குறைக்கலாம் என்று எடுத்துரைக்கப்பட்டது.

இக்கால இலக்கியம் - புதினமும் சிறுகதையும் எனும் தாளில் நவீனச் சூழல்களை வெளிப்படுத்தும் இக்கால எழுத்தாளர்களாகிய குமாரநந்தன், சக்திசரவணன் திருச்செந்தாழை போன்றோர்களின் படைப்புகளைப் பாடத்திட்டத்தில் இணைக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

திராவிடச் சிறுகதைகள், நாவல்கள் இடம்பெற-வில்லை என்ற கருத்தும் பதிவு செய்யப்பட்டது.

புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளையும் பாடத்திட்டத்தில் சேர்க்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

'காலந்தோறும் தமிழர் பண்பாடு' எனும் தாளில் எதிர்மறைக் கலாச்சாரப் பண்பாட்டு நிகழ்வு-களையும் பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

'செம்மொழித் தமிழும் தமிழ்மொழி வரலாறும்' எனும் தாளில் பார்வை நூலிலுள்ள 'மொழிவரலாறு - மு. வரதராசன்' என்ற புத்தகத்தைப் பாட நூலாக மாற்ற வேண்டும்.

'இலக்கணம் - சொல்' எனும் தாளில் பாடநூலாக இடம்பெறும் சேனாவரையர் உரையில் கழக வெளியீடு என்று பதிப்பகத்தையும் அச்சிடுதல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

'பக்தி இலக்கியம்' எனும் நூலில் இடம்பெறும் சித்தர் பாடல்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். கூறு 1 இல் இடம்பெறும் அ. அ. மணவாளன் — தமிழ்ப் பக்தி இலக்கியம் - முன்னுரை மட்டும்' என்பதில் 'முன்னுரை மட்டும்' என்ற பகுதியை நீக்குதல் வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.

'கிறித்துவமும் தமிழும்' எனும் நூலில் கூறு - 5 இன் பாடப்பகுதியாக அருட்தந்தை மலிப் எழுதிய 'விடுதலை இறையியல்' என்ற புத்தகத்தைச் சேர்க்கலாம் எனும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

மயிலை சீனி வேங்கடசாமியின் 'கிறித்தவமும் தமிழும்' எனும் புத்தகத்தைப் பார்வை நூலில் சேர்க்கவேண்டுமென்று கூறப்பட்டது.

'அற இலக்கியம்' எனும் நூலில் மாணவர்கள் இதுவரை கற்காத அற இலக்கியங்களைப் பாடமாக வைத்தால் நன்றாக இருக்கும் என்று பாடத்திட்டக் குழு கூறியது.

இளங்கலைத் தமிழ்த்துறை:

'இக்கால இலக்கியம் - கவிதை நாடகம்' எனும் நூலில் 'படிமலாய்' போன்ற கவிஞர்களின் மேற்கத்திய மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் இணைக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

'விளம்பரக்கலை' எனும் நூலில் நவீன விளம்பரங்கள் பற்றியச் செய்திகளையும் இணைக்கலாம் என்று கூறப்பட்டது.

Feed Back:

பிற துறையால் நடத்தப்படும் 'நாட்டுப்புறவியல்' எனும் தாளை இரண்டு ஆசிரியர்கள் நடத்தினால் நன்றாக இருக்கும் என்று முதுகலை மாணவப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் முனைவர் ஆ. ஜாண்பால் நன்றி கூறினார். இத்துடன் பாடத்திட்டக் குழுக் கூட்டம் நிறைவடைந்தது.

2022 - 2023 ஆம் கல்வியாண்டின் சிறப்புப் பாடத்திட்டக்குழுக்கூட்டம்

தமிழ்த்துறை

2022 - 2023 ஆம் கல்வியாண்டின் சிறப்புப் பாடத்திட்டக்குழுக் கூட்டம் 13.10.22 (வியாழக்கிழமை) அன்று காலை 11:30 மணிக்குத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அறையில் நடைபெற்றது. துறைத்தலைவர் முனைவர் அ.கு. இக்னேஷியஸ் சேவியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் அமைதியான இறைவேண்டலுடன் தொடங்கியது. இக்கூட்டத்தில் புறவாற்பண்ணர் இருவரும் பேராசிரியர்கள் 25 பேரும் மாணவப் பிரதிநிதிகள் இருவரும் கலந்து கொண்டனர்

கலந்து கொண்டோர்

1. முனைவர் அ. வளர்மதி
2. முனைவர் ந. இரகுதேவன்
3. முனைவர் ஞா. குருசாமி
4. முனைவர் அ.கு. இக்னேஷியஸ் சேவியர்
5. முனைவர் இரா. பிரான்சிஸ் சேவியர்
6. முனைவர் ஆ. இருதயராஜ்
7. முனைவர் கு. ஜா. இதயராஜா
8. முனைவர் த. சே. கலாவதி
9. முனைவர் ச. கந்தன்
10. முனைவர் சு. ரவிஜேசுராஜ்
11. முனைவர் வி. கில்பர்ட் ஜெனார்த்தனன்
12. முனைவர் மி. கவிதா
13. முனைவர் இரா. அந்தோணிராஜ்
14. முனைவர் ஆ. முருகன்
15. முனைவர் ஆ. ஜான்கிருபாணி
16. முனைவர் ஆ. ஜான்பால்
17. முனைவர் ம. முருகன்
18. முனைவர் மா. பாலசெல்வி
19. முனைவர் ச. இளங்கோமணி
20. முனைவர் த. ஷமீளா ஜோஸ்டர்
21. பேரா. ஜா. ஆஸ்பர்ட்
22. முனைவர் அந்தோணி சகாய சோபியா ஜே

23. முனைவர் கு. மெய்சி
24. முனைவர் ச. தமிழ்செல்வன்
25. முனைவர் கி. ஜெனிபா மேரி
26. ஜோ. தன்நேவிஸ் சான்ட்ரா (சிறப்புத்தமிழ்)
27. M.R. ஆன்றோ வனராஜ் (அடிப்படைத் தமிழ்)

## சிறப்பு பாடத்திட்டக் குழுக் கூட்டம்

விவாதக் கருத்துக்கள் பின்வருமாறு:

அடிப்படைத்தமிழ்:

அடிப்படைத் தமிழ் முதல் பருவத்திற்கான பாடத்திட்டத்தில் லகர, ளகர, ரகர, றகர வேறுபாடு சொற்கள் - இவற்றை வரைமுறைப்படுத்த வேண்டும்.

கூறு - 4 இல் இன எழுத்துக்களை அறிமுகப்படுத்தலாம் என்பதைப் பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

சொல் உச்சரிப்பு பயிற்சிக்காகத் திருக்குறள் போன்ற பாடல்களைச் சேர்க்கலாம் என்றும் முதல் பருவத்தில் ஒலிவடிவமும், வரிவடிவம் இரண்டாம் பருவத்தில் சொல்லும், பொருளும் மூன்றாம் பருவத்தில் உரையாடலும் மனனம் செய்தலும் நான்காம் பருவத்தில் பொருண்மையும், எழுத்துப் பயிற்சியும் என்ற அடிப்படையில் பாடத்திட்டத்தை அமைத்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அடிப்படைத்தமிழ் நான்கு பருவத்திற்கும் நடத்தப்படுவதால் தேர்வு கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது.

தேர்வு மதிப்பெண்கள், மதிப்பீட்டு முறையில் மாற்றம் கொண்டு வரலாம். அதாவது எழுத்துத் தேர்வாக இல்லாமல் வாய்மொழித் தேர்வாக நடத்தலாம் என்று பாடத்திட்டக்குழு

பரிந்துரைத்தது.

சிறப்புத்தமிழ் :

முதல் பருவத்தில் புதிய எழுத்தாளர்களின் படைப்புகளைச் சேர்க்கலாம். சிறுகதைகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். கூறு 5 இல் மொழி முதல் மற்றும் இறுதி எழுத்துக்களை அறிமுகப்படுத்தலாம் என்று பாடத்திட்டக்குழு கூறியது.

பாடப்பகுதிகள் அதிகமாக உள்ளது சற்று குறைக்கலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாம் பருவத்தில் 'இலக்கிய வரலாறு' என்பதை ஒரு அலகாகச் சேர்க்கலாம். கூறு 2 இல் ஒரு ஆழ்வார் பாடலை மட்டும் இணைக்கலாம். கூறு 3 இல் இடம்பெறும் பாடப் பகுதிகளைக் குறைக்கலாம். பயிற்சி சார்ந்து பாடப்பகுதிகளைத் திட்டமிட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

கூறு 1, 2 இல் இலக்கியங்களை அறிமுகம் செய்து கூறு 4, 5 இல் மொழிப்பயிற்சி, பயன்பாட்டுத் தமிழ் என்ற அடிப்படையில் பாடங்களைச் சேர்க்கலாம் என்று புறவிற்பன்னர் கருத்துத் தெரிவித்தார்.

மூன்றாம் பருவத்தில் சிறப்புத் தமிழுக்கான பாடங்கள் அதிகம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. கூறு 1 ஆனது காப்பியம். சிறுகாப்பியங்களை அறிமுகம் செய்தல் வேண்டும். பாடத்திட்டத்திற்கான நோக்கத்தில் 'காப்பிய இலக்கிய அறிமுகம்' என்று மாற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நான்காம் பருவத்தில் கூறு 1 இல் சங்க இலக்கியங்களை அறிமுகம் செய்தல் வேண்டும். கூறு 2 இல் இடம்பெறும் பாடப்பகுதிகளைச் சற்று குறைத்தல் வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.

நான்கு பருவத்திலும். பாடத்திட்டத்தில் இடம்பெறும் 5 ஆவது அலகு பயிற்சி அடிப்படையில் பயன்பாட்டுத் தமிழ் இடம்பெற்றால் நன்றாக இருக்கும் என்ற கருத்தினை புரவலர் பண் தெரிவித்தார்.

ஒவ்வொரு பருவத்திற்கும் குறிப்பிட்ட கால இலக்கியங்களை அறிமுகம் செய்தல் என்ற அடிப்படையில் பாடத்திட்டத்தை அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்று பாடத்திட்டக் குழு பரிந்துரைத்தது.

அரசு விதிகள் படி தேர்வு அவசியம் எனும் நிலையில் அடிப்படைத் தமிழ் தாளுக்கான தேர்வினை முதல் இரண்டு பருவங்களிலும் வாய்மொழித் தேர்வாகவும், மூன்று, நான்காம் பருவங்களில் எழுத்துத் தேர்வாகவும் நடத்துதல் வேண்டும் என்ற கருத்து பாடத்திட்டக் குழுவின -ரால் எடுத்துரைக்கப்பட்டது.

பின்னூட்டக் கருத்துக்கள் : (Feed Back) :

நீண்ட சிறுகதைகள் வேண்டாம். புதுக்கவிதைக்கு விளக்கம் வேண்டும் என்று மாணவப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்.

தமிழ் தெரியாத மாணவர்களுக்கு நடத்தப்படும் அடிப்படைத்தமிழ் பாடத்திட்டம் எளிமையாக இருந்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்தையும் மாணவர் தெரிவித்தார்.

கூட்டத்திட்டத்தில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம. முருகன் நன்றி கூறினார். இத்துடன் சிறப்பு பாடத்திட்டக் குழுக் கூட்டம் நிறைவடைந்தது.

2023-2024 ஆம் கல்வியாண்டின் சிறப்புப் பாடத்திட்டக்குழுக் கூட்

தமிழ்த்துறை

2023-2024 ஆம் கல்வியாண்டின் சிறப்புப் பாடத்திட்டக் குழுக் கூட்டம் 19.08.23 (சனிக்கிழமை) அன்று காலை 10:00 மணிக்குத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அறையில் நடைபெற்றது. துறைத்தலைவர் சு.ஜா. ஜெயராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் முனைவர் பி. மைக்கேல் சைனி அவர்களின் இறைவணக்கத்துடன் தொடங்கியது. இக்கூட்டத்தில் பின்வரும் துறைப்பேராசிரியர் பெரும் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்டோர்.

முனைவர் ந. இரகுதேவன் - ABSENT
முனைவர் சு. குருசாமி - ABSENT
முனைவர் த. தனலெட்சுமி - ABSENT
முனைவர் இரா. ஏஞ்சல் - ABSENT
முனைவர் சு.ஜா. ஜெயராஜா
முனைவர் க.சே. கலாவதி - OD
முனைவர் ச. கந்தன்
முனைவர் சி. ரவிஜேசுராஜ் - OD
முனைவர் வி. கில்பர்ட் ஜெனார்த்தனன் ✓
முனைவர் பி. கவிதா
முனைவர் இரா. அந்தோணிராஜ்
முனைவர் ஆ. முருகன்
முனைவர் ம. முருகன்
முனைவர் அருள்செல்வி
முனைவர் ஆ. ஜாண்பால்
முனைவர் மா. பாலசெல்வி
முனைவர் ச. இளங்கோமணி
முனைவர் த. ஷமீலா ஜோஸ்டர்
பேரா. ஜா. ஆல்பர்ட்
முனைவர் அந்தோணி சகாய சோபியா ஜே
முனைவர் கு. டெய்சி
முனைவர் ச. தமிழினியன்
முனைவர் இ. ஜெனிபா மேரி

பேரா. அ. இராச்குமார்
முனைவர் விமலா
பேரா. விஜய்
முனைவர் பி. மைக்கேல் சைனி
பேரா. கோமதி — ABSENT
பேரா. விஸ்வா அண்ணாமலை
முனைவர் ஜான்சி ராணி — ABSENT
பேரா. கல்பனா

விவாதக் கருத்துகள் பின்வருமாறு:

பொதுத்தமிழ்:

பொதுத் தமிழ் தாளில் முதலாம் பருவத்திற்கான பாடத்திட்டத்தில் அலகு 4 இல் இடம்பெறும் பாடம் சார்ந்த இலக்கிய வரலாறு என்ற தலைப்பில் மரபுக் கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, சென்ரியூ ஆகியன சேர்க்கப்படுகின்றன.

பொதுத்தமிழ் - இரண்டாம் பருவத்தில் சைவம், வைணவம், இஸ்லாம், கிறித்தவம் என்ற அடிப்படையில் பாடப்பகுதிகள் அமைந்துள்ளன. அதனால் அலகு 4 இல் இடம்பெறும் இலக்கிய வரலாறு பகுதியில் பல்லவர், நாயக்கர் காலத்தை மட்டும் பேசாமல் சைவம், வைணவம், கிறித்தவம், இஸ்லாம் என்ற அடிப்படையில் இலக்கிய வரலாறு பேசப்பட வேண்டும் என்று பாடத்திட்டக் குழு பரிந்துரைத்தது.

முதுகலைத் தமிழ்:

மாணவர்கள் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள் என்ற வரிசை முறையில் கற்றால் நன்றாக இருக்கும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. 2024-2025 ஆம் கல்வியாண்டிலிருந்து இவ்வரிசை முறையில் மாணவர்களுக்கு இலக்கணப் பாடப்பகுதிகள்

எழுத்து, சொல், பொருள் என்ற வரிசை முறையில் கற்கலாம் என்ற கருத்தைப் பாடத்திட்டக்குழு பரிந்துரை செய்தது.

நாட்டார் வழக்காற்றியல் - எனும் தாளின் அலகு 2-இல் இடம்பெறும் கள ஆய்வுகள் பற்றி பேசப்பட்டது.

முதுகலைப் பாடத்திட்டத்தில் முதல் இரண்டு பருவங்களுக்குரிய அனைத்து பாடத்தாள்களும் பாடத்திட்டக்குழுவினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மூன்றாம், நான்காம் பருவத்திற்கான புதிய பாடத்திட்டத்தில் இடம்பெறும் பாடத்தாள்களின் பாடப் பகுதிகளை வடிவமைப்பதற்குப் பொறுப்பாசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

மூன்றாம் பருவத்தில் சிற்றிலக்கியம், தொல்காப்பியம் எழுத்து, ஆராய்ச்சி நெறிமுறைகள் என்பன முதன்மைத் தாள்களாகவும், படைப்புத்திறன், வளம்பரக்கலை என்பன தொழில் சார் முதன்மைத் தாள்களாகவும், உரையாசிரியர்கள் எனும் தாளானது விருப்பப்பாடமாகவும், நூலகவியல் திறன் மேம்பாட்டு பாடமாகவும் சேர்க்கப்படுகின்றன.

நான்காம் பருவத்தில் சங்க இலக்கியம், சொல்லதிகாரம் ஆகியன முதன்மைத் தாள்களாகவும், தமிழில் சிறு பத்திரிக்கைகள் - விருப்பப்பாடமாகவும், பணித் தேர்வுத் தமிழ் திறன் மேம்பாட்டு பாடமாகவும் இணைக்கப்படுகின்றன.

| மூன்றாம் பருவம் | பொறுப்பாசிரியர்கள் |
|---|---|
| 1. சிற்றிலக்கியம் | முனைவர் ஆ. முருகன் |
| 2. தொல்காப்பியம் - எழுத்து | முனைவர் ச. கந்தன் |
| 3. ஆராய்ச்சி நெறிமுறைகள் | முனைவர் கிரா. அந்தோணிராஜ் |
| 4. படைப்புத்திறன் | முனைவர் ஆ. அருள்செல்வி |
| 5. வளம்பரக்கலை | முனைவர் ம. கவிதா |
| 6. உரையாசிரியர்கள் | முனைவர் த. சே. கலாவதி |
| 7. நூலகவியல் | முனைவர் அ. ஜாண்பால் |

| நான்காம் பருவம் | பொறுப்பாசிரியர்கள் |
|---|---|
| 1. சங்க இலக்கியம் | முனைவர் சி. ரவிஜெசராஜ் |
| 2. சொல்லதிகாரம் | முனைவர் ச. கந்தன் |
| 3. தமிழில் சிறு பத்திரிக்கைகள் | முனைவர் ம. முருகன் |
| 4. பணித்தேர்வுத் தமிழ் | முனைவர் வ. கில்பர்ட் ஜெனாத்தனன் |

இளங்கலைத் தமிழ்த்துறை :

'தமிழ் இலக்கிய வரலாறு' எனும் தாளுக்குரிய பார்வை நூல்கள் வரிசையில் ஞா. தேவநேயனின் 'இலக்கிய வரலாறு' எனும் நூலானது இணைக்கப்படுகின்றது.

முதல் இரண்டு பருவங்களுக்குரிய அனைத்து தாள்களும் பாடத்திட்டக் குழுவினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3, 4, 5, 6 ஆம் பருவத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட பாடத்தாள்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டன. இத்தாள்களில் அமைக்கப்படும் பாடப்பகுதிகள் பற்றிய கருத்துக்கள் வரும் பிப்ரவரி மாத பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

இளங்கலைத் தமிழ் பாடத்திட்டத்தில் காப்பியங்கள், நன்னூல் எழுத்து, பக்தி இலக்கியம், நன்னூல் - சொல், சிற்றிலக்கியம், இலக்கணம் - பொருள், நாட்டுப்புறவியல், சங்க இலக்கியம் - அகம், சங்க இலக்கியம் - புறம், யாப்பும், அணியும், இலக்கியத் திறனாய்வு, ஆகியன முதன்மைத் தாள்களாகவும் தமிழரின் மேலாண்மைச் சிந்தனைகள், தமிழ் மரபு மருத்துவம், நாடகவியல், தமிழ் பண்பாட்டு வரலாறு, நாட்டார் மரபுகள் ஆகியன விருப்பப் பாடங்களாகவும், தொழில் முனைவுத் தமிழ், போட்டித் தேர்வுகளுக்குரிய தமிழ் இலக்கிய வரலாறு பணிவாய்ப்புத் தமிழ் என்பன திறன் மேம்பாட்டு பாடங்களாகவும் சேர்க்கப்படுகின்றன.

ECC

இளங்கலைப் பாடத்திட்டத்தில் நாடகக்கலை, கிறித்தவ இலக்கியம், ஊடகத் தமிழ், படைப்பிலக்கிய தலித்தியம், கவின் கலைகள் ஆகியன ECC தாள்களாகவும். தமிழ் கற்பிக்கும் முறை, தமிழ் இலக்கண வரலாறு என்பன value Added course தாள்களாகவும், நாட்டார் மரபுகள்,

classmate
Date
Page

பயன்முறைத் தமிழ் என்பன Add on course தாள்களாகவும் இணைக்கப்படுகின்றன.

முதுகலைப் பாடத்திட்டத்தில் சுற்றுலாவியல். மக்கள் தகவல் தொடர்பியல் என்பன ECC தாள்களாகவும், பேச்சுக்கலை என்பது Value Added course தாளாகவும் இணைக்கப்படுகின்றது.

கூட்டத்தில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் முனைவர் மா. பாலசெல்வி நன்றி கூறினார். இத்துடன் பாடத்திட்டக் குழுக் கூட்டம் நிறைவடைந்தது.

## 2023 - 2024 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக்குழுக்கூட்டம்

### தமிழ்த்துறை

2023 - 2024 ஆம் கல்வியாண்டின் சிறு பாடத்திட்டக் குழுக் கூட்டம் 23.02.24 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10:00 மணிக்குத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அறையில் நடைபெற்றது. துறைத்தலைவர் சூ. ஜா. ஜெயராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் அமைதியான இறைவேண்டலுடன் தொடங்கியது. இக்கூட்டத்தில் புறவிற்பன்னர் துறைப்பேராசிரியர் 27 பேரும் கலந்து கொண்டனர்

### கலந்துகொண்டோர்.

முனைவர் ந. இரகுதேவன் ABSENT
முனைவர் ஞா. குருசாமி ABSENT
முனைவர் த. தனலெட்சுமி த. தனலெட்சுமி 23/2/24
முனைவர் இரா. ஏஞ்சலின் ABSENT
முனைவர் சூ. ஜா. ஜெயராஜா 23/2/24
முனைவர் த. சே. கலாவதி த. சே. கலாவதி
முனைவர் ச. கந்தன்
முனைவர் சு. ரவிசேகரராஜ்
முனைவர் வி. எல்பர்ட் ஜனார்த்தனன் V.
முனைவர் மி. கவிதா மி. கவிதா
முனைவர் இரா. அந்தோணிராஜ்
முனைவர் ஆ. முருகன்
முனைவர் ம. முருகன்
முனைவர் அருள்செல்வி. அ. அருள்செல்வி 23/02/24
முனைவர் ஆ. ஜாண்பால்
முனைவர் மா. பாலசெல்வி.
முனைவர் ச. இளங்கோமணி
முனைவர் ந. ஜினோ ஜோஸ்டர்
பேரா. ஜா. ஆல்பர்ட்
முனைவர் அந்தோணி சகாய சோபியா ஜே.
முனைவர் கு. டெய்சி கு. டெய்சி
முனைவர் ச. தமிழினியன்

முனைவர் கி. ஜெனிபா மேரி

பேரா. அ. இராச்குமார்

முனைவர் ப. விமலா

பேரா சி. விஜய்

பேரா. கோமதி

முனைவர் ம. மைக்கேல் சைனி

பேரா. வில்வா அண்ணாமலை

முனைவர் ஜான்சி புஷ்பராணி

பேரா. கல்பனா

விவாதக் கருத்துக்கள் பின்வருமாறு:

முதுகலைத்தமிழ்:

முதுகலைப் பாடத்திட்டத்தில் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்துப் பாடத்தாள்களும் பாடத்திட்டக் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

~~'அற இலக்கியம்' என்னும் தாளில் திருக்குறள் - பொருட்பாலிலிருந்து சில அதிகாரங்களைச் சேர்க்கலாம் என்று பாடத்திட்டக்குழு பரிந்துரைத்த~~

இளங்கலைத் தமிழ்:

அற இலக்கியம், காப்பியம், சிற்றிலக்கியம், சங்க இலக்கியம் என்னும் தாள்களுக்கான பாடத்திட்டத்தில் இவ்விலக்கியங்களை அறிமுகப் -படுத்தும் பகுதிகளையும் இணைக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

இதழியல், ஊடகவியல், தொழில் முனைவுத் தமிழ் ஆகிய பாடத்தாள்களைக் கள ஆய்வுகளோடு சேர்த்து கற்பித்தால் மாணவர்கள் மிகுந்த பயன் அடைவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறப்புத்தமிழ் - 2' எனும் தாளுக்கான பாடத்திட்டத்தில், முதல் அலகில் இடம்பெறும் கட்டுரைகளைச் சுருக்கமாகத் தந்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்தானது முன்வைக்கப்பட்டது.

மூன்றாம் பருவத்திற்குரிய அடிப்படைத் தமிழ் எனும் தாளுக்கான பாடத்திட்டத்தில் இடம்பெறும் முதன்மைத் தலைப்புகளோடு உட்பிரிவுகளையும் இணைத்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுத்தமிழ் :

புதிதாக வடிவமைக்கப்பட்ட பொதுத்தமிழ் பாடத்திட்டமும் பாடத்திட்டக் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முதுகலை மற்றும் இளங்கலைப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ECC, Value Added course, Add ON course - கள் இடம் பெறும் அனைத்துப் பாடத்தாள்களும் பாடத்திட்டக் குழுவினர் முன் எடுத்துரைக்கப்பட்டன.

இத்தாள்களுக்குப் பாடத்திட்டக் குழு அனுமதியளித்தது.

தமிழ்த்துறையில் 26.02.24 அன்று நடத்தப்படும் தேசியக் கருத்தரங்கில் அனைத்துப் பேராசிரியர்களும் கலந்துக் கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று துறைத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் முனைவர் மா. பாலசெல்வி நன்றி கூறினார். இத்துடன் பாடத்திட்டக் குழுக் கூட்டம் நிறைவடைந்தது.

2024 - 25 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக்குழுக் கூட்டம்

## தமிழ்த்துறை

2024 - 25 ஆம் கல்வியாண்டின் பாடத்திட்டக் குழுக் கூட்டம் 01.02.25 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்குத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அறையில் நடைபெற்றது. Dr. சூ. ஜா. ஜெயராஜா (துறைத்தலைவர்) அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டம் அமைதியான இறைவேண்டலுடன் தொடங்கியது. இக்கூட்டத்தில் புறவிற்பன்னர் துறைப்பேராசிரியர்கள் 27 பேரும் கலந்து கொண்டனர்.

## கலந்துகொண்டோர்

அருட்தந்தை முனைவர் ம. அன்பரசு சே.ச
முனைவர் ந. சண்முகவடிவு (அ) சாந்தி
முனைவர் அருள் மைக்கேல் செல்வி
முனைவர் த. தனலெட்சுமி 1/2/25
முனைவர் மு. இராமச்சந்திரன்
முனைவர் சூ. ஜா. ஜெயராஜா
முனைவர் த. சே. கலாவதி
முனைவர் ச. கந்தன்
முனைவர் சு. ரவிஜெகராஜ்
முனைவர் வி. கில்பர்ட் ஜெனார்த்தனன்
முனைவர் மி. கவிதா
முனைவர் இரா. அந்தோணிராஜ்
முனைவர் ஆ. முருகன்
முனைவர் ம. முருகன்
முனைவர் அ. அருள்செல்வி
முனைவர் ஆ. ஜாண்பால்
முனைவர் மா. பாலசெல்வி
முனைவர் ச. இளங்கோமணி
முனைவர் த. ஷீலா ஜோஸ்டா
முனைவர் ஜா. ஆல்பர்ட்
முனைவர் அந்தோணி சகாய சோபியா ஜே.

முனைவர் கு. டெய்சி

முனைவர் ச. தமிழினியன்

முனைவர் ஜ. ஜெனிபா மேரி

முனைவர் ப. விமலா

பேரா சி. விஜய்

முனைவர் ம. மைக்கேல் சைனி

பேரா சி. கோமதி

பேரா. இரா. வில்வா. அண்ணாமலை

பேரா. க. முத்துவளவன்

முனைவர் மு. கலைச்செல்வி

பேரா. இரா. விஜயா

முனைவர் சே. லா. ஆக்னல் மரிஸ்கா

விவாதக் கருத்துக்கள் பின்வருமாறு

முதுகலைத் தமிழ்:

இக்கால இலக்கியம் எனும் தாளில் கூறு இரண்டில் இடம்பெறும் பாச்சேர்த்தி. பாரதியின் கவிதைகளும் யவனிகா ஸ்ரீராம், பச்சியப்பன், மோகன் சங்கர், அ.பி. சேரன், க்ருஷாங்கினி, பெருந்தேவி, கனிமொழி போன்ற பகுதிகள் நீக்கப்படுகின்றன. அதற்குப் பதிலாக புதுக்கவிதைப் படைப்பாக்கப் பயிற்சி இணைக்கப்படுகின்றது.

கூறு மூன்றில் இடம்பெறும் சுந்தர ராமசாமியின் பிரசாதம் சிறுகதையும் அம்பையின் வீட்டில் சிறுகதையும் நீக்கப்பட்டு, சிறுகதைப் படைப்பாக்கப் பயிற்சி இணைக்கப்படுகிறது.

பண்பாட்டு மானுடவியல் எனும் தாளில் பொருளியல் செயல்பாடுகள் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இரும்பு பண்பாட்டை இணைக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

பக்தி இலக்கியம் எனும் தாளில் கூறு மூன்றில் இடம்பெறும் நம்மாழ்வார் நீக்கப்பட்டு திருமங்கையாழ்வாரின் திருமொழியில்

'வாழ்வெரு' வாழ்வும்' இணைக்கப்படுகிறது

காப்பிய இலக்கியம் எனும் தாளில் கூறு 1 இல் இடம்பெறும் மதுரைக் காண்டத்தில் முதல் நான்கு காதைகளும் நீக்கப்படுகின்றன. மதுரைக் காண்டத்தில் தொடர்ந்த 26 காதைகளும் வஞ்சிக்காண்டத்தில் 27 - 30 காதைகளும் இணைக்கப்படுகின்றன.

கூறு 4 இல் இரட்சணிய யாத்திரிகம் நீக்கப்பட்டு தேம்பாவணியில் வளன் சனித்தப் படல இணைக்கப்படுகிறது.

சிற்றிலக்கியம் - எனும் தாளில் கூறு 3 இ சிங்கன் சிங்கி உரையாடல் பகுதியை இணைக்க என்று பாடத்திட்டக் குழு பரிந்துரைத்தது.

நாட்டார் வழக்காற்றியல் எனும் தாளில் மாணவர்கள் கள ஆய்வு மேற்கொண்டு தகவல்களை திரட்டினால் நன்றாக இருக்கும் என்று பாடத்திட்டக் குழு தெரிவித்தது.

தொல்காப்பியம் - எழுத்து எனும் தாளில் கூறு 5 இல் ஒலியனியல் சேர்க்கப்படுகிறது.

நூலகவியல் - எனும் தாளில் கூறு 5 இல் பணி அனுபவச் செயல்பாடுகள் சேர்க்கப்படுகிறது. நூலகச் செயல்பாட்டின் மொழிபெயர்ப்பு நீக்கப்படுகிறது.

சங்க இலக்கியம் தாளில் கூறு 2 இல் இடம்பெறும் புறநானூற்றில் 55 ஆம் பாடல் நீக்கப்பட்டு 56 ஆம் பாடல் சேர்க்கப்படுகிறது.

தொல்காப்பியம் - சொல் எனும் தாளில் கூறு 5 இல் உருபனியல் சேர்க்கப்படுகிறது.

தமிழ் சிறு பத்திரிக்கைகள் தாளில் கூறு 3 இன் பகுதிகள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக 1980 களில் வெளிவந்த இலக்கிய முற்போக்கு சிற்றிதழ்கள், அவற்றின் இலக்கிய விமர்சன நோக்குகள் - மொழிபெயர்ப்பு முயற்சிகள் - காலச்சுவடு, வைகை, மேலும், ஆராய்ச்சி, படி - கவனம், கட்சி நிகழ், உயர்மெய், ஸ்வரம், கட்சி (அரும்பு, மல்லிகை உங்கள் நூலகம் போன்றவை இணைக்கப்படுகின்றன

## இளங்கலைத் தமிழ்:

இக்கால இலக்கியம்' எனும் நூலில் கூறு 1 இல் பெண் கவிஞர்களின் கவிதைகளைக் கூடுதலாக இணைக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

கூறு 5 இல் கவிதை, சிறுகதை படைப்பாக்கப் பயிற்சியை இணைக்கலாம் என்று பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

அற இலக்கியம் நூலில் கூறு 2 இல் இடம்பெறும் ஆசாரக்கோவையின் 1-10 பாடல்களுக்குப் பதிலாக வேறு பாடல்களை சேர்க்கலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

காப்பியங்கள் எனும் நூலில் அலகு 1 இல் சிலப்பதிகாரம் இணைக்கப்படலாம் என்று எடுத்துரைக்கப்பட்டது.

தொழில் முனைவுத் தமிழ் எனும் நூலுக்கான பாடநூல் வரிசையில் தமிழ் வழியிலான பாடநூலானது இணைக்கப்படுகிறது.

பக்தி இலக்கியம் எனும் நூலில் அலகு 2 இல் இடம்பெறும் நாச்சியார் திருமொழியின் பாடல்களைக் குறைக்க வேண்டும் என்று பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

போட்டி தேர்வுகளுக்குரிய தமிழ் இலக்கிய வரலாறு எனும் நூலுக்கான வினாத்தாள் அமைப்பு முறையை ஒரு மதிப்பெண் அடிப்படையில் அமைந்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. தேர்வுக் கட்டுப்பாட்டாளரிடம் அனுமதி பெற்ற பின் இம்மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று பாடத்திட்டக்குழுவினர் . பரிந்துரைத்தனர்

'நாட்டுப்புறவியல்' - எனும் நூலை நாட்டார் வழக்காற்றியல் என்று மாற்றலாம் என பாடத்திட்டக்குழு பரிந்துரைத்தது.

தமிழ் மரபு மருத்துவம் நூலில் இடம்பெறும் பாடப்பகுதிகளைக் குறைக்கலாம் என்று பாடத்திட்டக் குழு எடுத்துரைத்தது.

பொதுத்தமிழ் :

பொதுத்தமிழ் பாடத்திட்டத்தில் நான்கு பருவத்திற்கும் உரைநடைப் பகுதியைச் சேர்க்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இலக்கிய வரலாறு பகுதியானது உரைநடை வடிவில் கற்பிக்கப்படுவதால் கூடுதலாக உரைநடைக் கட்டுரைகளை இணைக்க வேண்டாம் என்று பாடத்திட்டக் குழு பதிலளித்தது.

நான்காம் பருவத்திற்குரிய பாடத்திட்டத்தில் அலகு 1 இல் இடம்பெறும் நற்றிணையின் 10 வது பாடலுக்குப் பதிலாக வேறு பாடலை இணைக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

கூட்டத்தில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் முனைவர் மா. பாலசெல்வி நன்றி கூறினார். இத்துடன் பாடத்திட்டக் குழுக் கூட்டம் நிறைவடைந்தது.